## தலைப்பு 261 – காலி மாவட்ட செயலகம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 261 – காலி மாவட்ட செயலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களையும் உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் காலி மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காலி மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக

ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட இந்த அறிக்கையின் 1.6.1 (அ) (i) பந்தியின் பரிந்துரை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின்/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 08 பிரதேச செயலகப் பிரிவில் காணப்பட்ட 39 பாடசாலைகள் மூடப்பட்டு 05 வருடங்கள் முதல் 24 வருடங்களுக்கு இடையிலான கால வீச்சைக் கடந்திருந்த போதும் அந்தப் பாடசாலையை எல்லைகளை அடையாளம் இட்டு பாடசாலைக்குரிய காணி மற்றும் கட்டடங்களை மதிப்பீடு செய்து சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | காணிகளை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் சொத்துக்களைக் கையேற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | சொத்துக்களைக் கையேற்கும் நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்து பெறுமதியினை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் மோட்டார் வாகனம், இயந்திர உபகரணங்களின் ஆரம்ப மீதி ரூபா 596,258,867 ஆக இருந்த போதிலும் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் இருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் ஆரம்பமீதி ரூபா 594,712,012 ஆனமையால் ரூபா 1,546,855 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | ஆரம்ப மீதிக்கு மேற்கொள்ளப்பட்ட சீராக்ககங்களும், ஆரம்பமீதி தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கும் போது ஆரம்ப மீதியிலே சேர்க்கப்பட்டுக் காணப்பட்டமையும் இந்த வேறுபாட்டுக்குரிய காரணமாகும். | வேறுபாட்டுக்குரிய காரணங்களை இனங்கண்டு மீதியினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின்/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலக்கம் 1409 செலவின விடயத்திற்காக 2023 ஆம் ஆண்டுக்குரிய மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாடு ரூபா 80,000,000 ஆக இருந்ததுடன் 318 குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தின் மூலமும் ரூபா 1,200,000 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கிடைத்த ரூபா 81,200,000 மொத்த தேறிய நிதியேற்பாட்டில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 67,167,588 மாத்திரம் செலவிடப்பட்டு ரூபா 14,032,412 சேமிக்கப்பட்டமையினால் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டில் அதிகளவான நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற காலி மாவட்ட செயலகத்தின் கேட்போர்கூடத்தின் பாதுகாப்பு சேவையை வழங்குவதற்காக குறைநிரப்பு மதிப்பீடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் பாதுகாப்பு சேவையை வழங்குவதற்கு முடியாமையின் அடிப்படையில் இந்த நிதியேற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. | தேவைகளை உரியவாறு இனங்கண்டு நிதியேற்பாடு ஒதுக்கீடு செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2005 ஆம் ஆண்டின் போது உத்தியோகத்தர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட மொழிப்படி கோரிக்கை அரசு நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் பிரதி தாபனப் பணிப்பாளரால் நிராகரிக்கப்பட்டிருக்கும் போது 2024 மார்ச் கணக்காய்வு சந்தர்ப்பம் வரையிலும் மாவட்ட செயலகத்தின் மூலம் அந்த உத்தியோகத்தருக்கு மொழிப்படி ரூபா 133,605 செலுத்தப்பட்டிருந்தது. 1998 திசெம்பர் 30 திகதிய இலக்கம் 29/98 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக தாபனப் பணிபாளருக்கு விடயம் சமர்ப்பித்து தேவையான விளக்கமளித்தல் பெற்றுக் கொள்ளப்படாமல் மேலதிக மாவட்ட செயலாளரால் இந்த கொடுப்பனவுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | 2012 ஆம் ஆண்டின் போது உத்தியோகத்தர் மேற்கொண்ட கோரிக்கையின் பிரகாரம் உத்தியோகத்தர் பின்பற்றியிருந்த ஆங்கில விடய பட்டப் பாடநெறியின் பிரதான பாடமாக இருந்ததாக பல்கலைக்கழகத்திலிருந்து தவகல் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் இந்தப்படி உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்டுள்ளது என தயவுடன் குறிப்பிடுகின்றோம்.<br><br>கணக்காய்வு அவதானிப்பின் பின்னர் இந்த மொழிப்படி செலுத்துவது தொடர்பாக மீண்டும் தாபனப் பணிப்பாளர் நாயகத்திடம் விசாரணை செய்யப்பட்டுள்ளதுடன் அந்த ஆலோசனை கிடைத்த பின்னர் அதன் பிரகாரம் செயற்பட்டு கணக்காய்வுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | 2005 ஆம் ஆண்டின் போது அரச நிர்வாக அமைச்சின் பிரதி தாபனப் பணிப்பாளரால் உரிய கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருக்கும் போது கொடுப்பனவு செய்தல் பிழையானதாக இருந்தமையால் அது தொடர்பான பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.2 வைப்புக்கள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின்/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மாவட்ட செயலகம் மற்றும் அதனோடு இணைந்த 22 பிரதேச செயலகங்களுக்குரிய 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 211,731,887 ஆன காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாவட்ட செயலகத்தின் பொது வைப்புக் கணக்கில் உள்ள ரூபா 10,000,000 தொகை விசேட பணிக்காக கிடைத்த நன்கொடையாக இருந்ததுடன் பிரதேச செயலகங்களின் பொது வைப்பு மீதி பல்வேறு காரணங்களின் அடிப்படையில் விடுவிப்பதற்கு முடியாதிருந்தது. | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின்/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
| --- | --- | --- |
| வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுக்குரிய பிரதேச செயலகங்களுக்கு நியமிக்கப்பட்டு சேவையாற்றுகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கப்பட்ட கடமைகளின் பிரகாரம் அதிகாரப் பிரதேசத்தில் வெளிநாடு சென்ற குடும்பம் மற்றும் வெளிநாடுகளில் சேவையாற்றி வருகை தருகின்ற ஊழியர்கள் தொடர்பான தரவு முறைமையொன்றை பேணிச்செல்லல், வெளிநாடு சென்ற குடும்பங்களின் பின்புல அறிக்கை, சமூக அறிக்கை பேணிச்செல்லல் போன்ற விடயங்கள், குடும்பங்களுக்காக அபிவிருத்தி திட்டங்களை தயாரித்தல், வெளிநாடு சென்ற குடும்பங்களின் பிள்ளைகளின் நலன்புரி நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்பார்வை செய்தல் மற்றும் ஆலோசனை மேற்கொள்ளல் வேண்டும். எனினும் வந்துரம்ப பிரதேச செயலகத்தில் அந்த நடவடிக்கைகள் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் போதியளவான மேற்பார்வையும் மேற்கொள்ளப்படவில்லை. | இந்தக் குறைபாடுகளை சரிசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | உத்தியோகத்தர் களுக்கு கையளிக்கப்பட்ட கடமைகள் உரிய பிரகாரம் நிறைவேற்றப்படல் வேண்டும். |

**3.2 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் அடையப்படாமை**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின்/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
| --- | --- | --- |
| (அ) கரந்தெணிய பிரதேச செயலகத்தால் ரூபா 9,943,748 செலவில் தெரிவு செய்யப்பட்ட 323 நலனாளிகளுக்கும் மற்றும் ஒரு சௌபாக்கிய உற்பத்தி சங்கத்திற்கு பெறுமதி சேர்க்கப்பட்ட கறுவா உற்பத்தி மேம்படுத்தலுக்காக உபகரணங்கள் | சௌபாக்கிய உற்பத்தி சங்கத்திற்கு வழங்கப்பட்ட உபகரணங்கள் செயற்படு நிலையில் காணப்படுவதுடன் தேவையான சந்தர்ப்பங்களின் போது உணகரணங்களின் பாதுகாப்புக்காக உறைகளில் | செயற்திட்டம் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் தொடர்சியாக மேற்கொண்டு பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத உபகரணங்கள் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்தது. 2023 செப்தெம்பர் 08 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களக்கணக்காய்வுப் பரிசோதனையின் போது சௌபாக்கிய உற்பத்தி சங்கத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 1,360,000 பெறுமதியான உபகரணங்கள் பயனற்றுக் காணப்பட்டதுடன் ரூபா 164,900 பெறுமதியான உபகரணங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் உறைகளில் இடப்பட்டிருந்தது. 06 நலனாளிகளுக்கு ரூபா 597,000 பெறுமதியான கறுவா அரைக்கும் இயந்திரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட கறுவா உற்பத்தி சந்தைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | மூடிவைப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 06 நலனாளிகளுக்கு வழங்கப்பட்ட கறுவா அரைக்கும் இயந்திரம் மூலம் உற்பத்தி நடவடிக்கைகள் இடையூறு இன்றி மேற்கொள்ளப்படுவதுடன் நாட்டில் காணப்படுகின்ற சிக்கலான பொருளாதார பின்புலத்தில் இந்த செயற்திட்டம் எதிர்பார்த்த பிரகாரம் வேகமாக அபிவிருத்தி செய்துகொள்வதற்கு முடியாதிருந்தமையும் வெற்றிகரமான முயற்சியாளர்கள் 15 பேர்களுக்கு மேற்பட்ட அளவில் இந்த செயற்திட்டம் மூலம் உருவாக்கப்பட்டிருந்தனர். | விளைவற்றுக் காணப்படுகின்ற உபகரணங்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுத்து ஆக்கபூர்வான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஹிக்கடுவ பிரதேச செயலகத்தால் மீன்சார்ந்த பெறுமதி அதிகரிப்பட்ட உற்பத்தி செயற்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்ட 50 நலனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 5,070,995 பெறுமதியான உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டது. ரூபா 20,190 பெறுமதியான உபகரணங்கள் பயன்பாடுகளுக்கு எடுக்கப்படாமல் உறைகளில் வைக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வின் போது சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி அவ்வாறான நிலைமை தொடர்ந்தும் இடம்பெறாமைக்கு கண்காணித்தல் வேண்டும். | உபகரணங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்தக்கூடிய வேலைத்திட்டம் ஒன்று தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (இ) | பத்தேகம பிரதேச செயலகத்தால் கை இயந்திரம் ஆடை உற்பத்தி செயற்திட்டத்திற்காக தெரிவு | கொவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் பொருளாதார வசதியீனத்தின் காரணமாக | செயற்திட்டத்தை அமுல்படுத்துதல் தொடர்பாக பின்தொடர் |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்ட 20 நலனாளிகளுக்கு ரூபா 4,642,471 தொகையும் இனிப்புப் பண்டங்கள் மற்றும் பால் உற்பத்தி செயற்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்ட 25 நலனாளிகளுக்கு ரூபா 368,416 தொகையும் செலவிட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தது. 2023 நவம்பர் 16 ஆம் திகதி கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் 11 நலனாளிகளுக்கும் மற்றும் சௌபாக்கிய கைஇயந்திர ஆடை கட்டிடத்திற்காக வழங்கப்பட்ட ரூபா 845,265 பெறுமதியான உபகரணங்கள் செயற்திட்டம் மூலம் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படாமையின் காரணமாக விளைவற்றுக் காணப்பட்டது. | உற்பத்தி நடவடிக்கைகள் மற்றும் விநியோக நடவடிகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் எதிர்காலத்தில் உற்பத்திகளை அதிகரிப்பதற்கும் விற்பனை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொண்டு வழங்கப்பட்ட உபகரணங்களை செயற்திறனாகப் பயன்படுத்தி அதன் மூலம் ஆகக்கூடிய பயன்பாட்டை பெற்றுக்கொள்ளுதல் தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். |

### 3.3 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின்/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட சமுர்த்திக் குடும்பங்களில் இரண்டு இலட்சத்தைக் கேந்திரமாக்கப்பட்ட முழுமையான வீட்டு வசதிகளை பொருளாதார ரீதியில் அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட 10 பிரதேச செயலகங்களில் 1,250 நலனாளிகளுக்காக ரூபா 39,630,093 செலவில் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த | செயற்திட்டத்தின் மூலம் எதிர்பாக்கப்பட்ட நலன்கள் பெறப்படாமையின் அடிப்படையில் எதிர்பாக்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்படாதிருந்தமையால் தொடர்ந்தும் சமுர்த்தி நிதி உதவி செலுத்தப்படுகின்றது. | பின்தொடர் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொண்டு உரிய நலனாளிகள் செயற்திட்டத்திற்கு ஈடுபடுத்துவதற்கும் அவர்களுக்கு காணப்படுகின்ற பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கும் ஆகக்கூடிய முயற்ச்சி எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் அதில் 726 நலனாளிகள் மீளாய்வாண்டின் போதும் எதிர்பார்த்த நலன்களை பெற்றுக்கொள்ளாததன் அடிப்படையில் தொடர்ந்தும் சமுர்த்தி நிதி உதவி செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | வெலிவிட்டிய திவிதுர பிரதேச செயலகத்தால் 39 நலனாளிகளுக்கு கல்கெட்டயம் மற்றும் கருங்கல் சார்ந்த உற்பத்தி மேம்படுத்தலுக்காக உபகரணம் மற்றும் வேலைத்தளம் தயாரிப்பதற்காக உபகரணங்கள் வழங்கியதற்காக ரூபா 3,790,838 செலவிடப்பட்டிருந்தது. 16 நலனாளிகளில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப்பரிசோதனை சந்தர்ப்பம் வரையிலும் 07 நலனாளிகளுக்காக வழங்கப்பட்ட ரூபா 234,300 பெறுமதியான வேலைத்தளம் தயாரிக்கும் உபகரணம் மற்றும் ஒரு நலனாளிக்கு வழங்கப்பட்ட ரூபா 35,040 பெறுமதியான ஏனைய உபகரணங்கள் பௌதீக ரீதியில் காணப்படவில்லை. | காணப்பட்ட பொருளாதார நெருக்கடியின் இடையே இந்த கைத்தொழில் வீழ்ச்சியடைந்திருந்தமையும் தற்போது இந்த உபகரணங்கள் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் மற்றும் பௌதீக அவதானிப்பில் காணப்படாத உபகரணங்கள் தொடர்பாக உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | அபிவிருத்தி செயற்திட்டங்களை தெரிவு செய்யும் போது ஆக்கபூர்வமான செயற்திட்டத்தை தெரிவு செய்வதற்கும், பௌதீக பரிசோதனை அவதானிப்புக்கு உட்படாத உபகரணங்களுக்கு பொறுப்பு வாய்ந்த நலனாளிகள் தொடர்பாக உரிய நடவடிக்கையும் எடுத்தல் வேண்டும். |

**3.4 முகாமைத்துவ நலிவுகள்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின்/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | அம்பலாங்கொடை பிரதேச செயலகத்தில் சத்துரிகம மக்கள் பங்குபற்றலுடன் கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 2020 இன் கீழ் பின்னதுவ ஒழுங்கையில் 4 ஆவது உபவிதியின் மத்தியில் உள்ள மின்சார | நிர்மாணத்தில் கொங்கிரீட் பெறுமதியில் 50 சதவீதம் நிறுத்தி வைக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | கொங்கிரீட் மாதிரிகள் தேவையான உள்ளடக்க வலுவின்றி இருக்கின்ற போது சதவீதமாக கொடுப்பனவு |

| | | | |
|---|---|---|---|
| | கம்பம் வீதியின் அருகில் காணப்பட்ட வடிகானைக் கட்டியெழுப்பும் செயற்திட்டத்திற்காக ரூபா 600,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. செயற்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கொங்கிரீட் தடிப்பத்தின் 08 மாதிரிகளில் 06 மாதிரிகள் தேவையான உள்ளடக்க வலுவினைக் கொண்டிருக்காததுடன் றுஹுணு பல்கலைக்கழகத்தின் மூலம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட கொங்கிரீட் தடிப்பத்தின் 03 மாதிரிகள் தேவையான உள்ளடக்க சக்தியைக் கொண்டிருக்காதிருக்கும் போது ரூபா 496,959 ஆன பட்டியல் பெறுமதியில் ரூபா 383,375 தொகை 2020 திசெம்பர் 31 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. | | செய்யாமல் முறையான நியமத்துடன் நிர்மாணங்கள் நிறைவேற்றப்படல் வேண்டும். |
| (ஆ) | கோனாபீனுவல பிரதேச செயலகத்தால் மீளாய்வாண்டில் விடுமுறை தின சம்பளம் செலுத்தும் போது தாபனவிதிக் கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 10 ஆவது பிரிவின் பிரகாரம் சேவையாற்றிய மணித்தியாலம் 8 இற்கு குறையாதிருந்தமை உறுதிப்படுத்தப்படாமல் உரிய உத்தியோகத்தரின் சான்றிதழை அடிப்படையாகக் கொண்டு உத்தியோகத்தர் இருவருக்காக விடுமுறைதின சம்பளம் ரூபா 178,648 தொகையும், பிரயாண செலவினமாக ரூபா 127,140 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | உத்தியோகத்தர்களுக்கு விடுமுறைதின சம்பளம் செலுத்தும் போது ஆற்றப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் மற்றும் ஓட்டக் குறிப்புக்களின் பிரகாரம் கடமைக்காலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. | தாபனவிதிக் கோவையின் பிரகாரம் வருகை மற்றும் வேலையாற்றிய காலத்தை உறுதிப்படுத்தி விடுமுறைதின சம்பளம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வாடகை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக 36 வாடகையாளர்களுக்குரிய கோவைகள் ஹிக்கடுவ பிரதேச செயலகத்தின் மூலம் தென் மாகாண காணி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டு கணக்காய்வுத் திகதியான 2023 செப்தெம்ர் 21 ஆந் திகதி வரையிலும் 01 வருடம் முதல் 06 வருடங்கள் வரையிலான கால வீச்சினை கடந்திருந்த போதிலும் அந்த அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை.<br>மேலும் காணி ஆணையாளர் நாயகத்தின் 2021 ஒக்தோபர் 22 ஆந் திகதிய இலக்கம் 2021/06 என்ற சுற்றறிக்கையின் பிரகாரம் மொத்த அண்ணளவான மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு குறித்துரைத்த சதவீதத்தின் பிரகாரம் வருடாந்த வாடகைத் தொகை கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இரண்டு வாடகையாளர்கள் தொடர்பான வாடகை அங்கீகரித்த கடிதம் காணி ஆணையாளர் நாயக திணைக்களத்திலிருந்து கிடைக்கப்பெற்றதுடன் மிகுதி 34 வாடகையாளர்கள் தொடர்பாக காணி ஆணையாளர் நாயகத்திற்கு மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | விரைவாக வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | றத்கம பிரதேச செயலகத்திற்காக புதிய கட்டடம் ஒன்றை வாடகைக்கு எடுக்கும் போது அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் ரூபா 250,000 தொகைக்கு மாதாந்த மதிப்பீட்டு வாடகை வழங்கப்பட்டிருக்கும் போது அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் பிரதேச செயலாளரால் நியமிக்கப்பட்ட குழு ஒன்றினால் வழங்கப்பட்ட வாடகைப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு மாதாந்த வாடகை ரூபா 325,000 வீதம் 04 வருடகாலத்திற்காக | அரசாங்கத்தின் மதிப்பீட்டுப் பெறுமதியில் கட்டிடத்தை வழங்குவதற்கு முடியாது இருந்தமையால் சுயாதீனக் குழு ஒன்று நியமித்து வாடகைத் தொகை மீண்டும் மதிப்பீடு செய்து உரிய கட்டிடம் வாடகைக்கு பெறப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு வாடகையாளர்களுடன் நடைபெற்ற புரிந்துணர்வு இணக்கப்பட்டின் அடிப்படையில் பழைய கட்டிடத்திலிருந்து அகற்றப்பட்ட பிரித்து வேறுபடுத்துதல் புதிய | அரசாங்கத்தின் மதிப்பீடுகளை வெளிப்படுத்தாமல் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டமையால் இது தொடர்பாக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. | கட்டிடத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. | |
| (உ) | அம்பலாங்கொடை பிரதேச செயலகத்தின் மூலம் அமுல்படுத்தப்பட்ட ஒரு கிராமத்திற்கு ஒரு தொழில் முயற்சியாளரை உருவாக்கும் செயற்திட்டத்திற்காக 23 நலனாளிகளுக்கு ரூபா 1,545,798 ஆன அரசாங்க பங்களிப்பொன்று செலவிடப்பட்டிருந்தது. 06 நலனாளிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 348,000 பெறுமதியான விசிறும் இயந்திரங்களின் இயலளவு மட்டுப்படுத்தப்பட்டமை, மின்சார வலு பயன்பாட்டு செலவினம் உயர்வடைந்து சென்றமை, போட்டியாளர் உற்பத்தியுடன் ஒப்பிடும் போது கிரயம் உயர்வடைந்து சென்றதன் காரணமாக வியாபார நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு முடியாதிருந்தது. | தொழில் முயற்சியாளர்களின் அவசியத் தேவை மற்றும் இயலளவின் பிரகாரம் இந்த இயந்திர உபகரணங்கள் வழங்கப்பட்ட போதும் மின்சாரப் பட்டியல் செலவினங்கள் உயர்வடைந்து சென்றமை தாக்கமளித்திருந்தமையும் தற்போது பல்வேறு செயற்பாடுகள் ஊடாக தொழில் முயற்சியாளர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். | செயற்திட்ட நலனாளிகளின் பிரச்சனைகளை இனங்கண்டு அதற்கான தீர்வினை வழங்குதல் வேண்டும். |

**4. மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின்/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தால் வழங்கப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையும் பல்வேறு பதவிகளில் 11 வெற்றிடங்களும், 114 மிகையும் காணப்பட்டது. | வெற்றிடங்கள் மற்றும் மிகைகள் தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகையினை அங்கீகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |